றேடியோ, மணிக்கூடு
பொலித்தீன் வகைகளையும்
அழகுசாதன, அன்பளிப்பு
விளையாட்டு, பிளாஸ்ரிக்
பொருள்களையும் உதிரியாகப்
பெற்றுக்கொள்ள

ஜெயா
அழகு மாடம்
177 A, இராசன் தெரு,
யாழ்ப்பாணம்.
(சி/1153)

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

அழகுசாதன, அன்பளிப்பு
விளையாட்டு, பிளாஸ்ரிக்
பொருள்களையும் மணிக்கூடு
றேடியோ பொலித்தீன்
வகைகளையும்
மொத்தமாகப்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்
ஜெயா
அழகு மாடம்
187, இராசன் தெரு,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 03 சனிக்கிழமை (17 - 06 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 202

அச்சுவேலியில் படையினரின் முன்னேற்ற நடவடிக்கை புலிகளினால் முறியடிப்பு!

பெரும் இழப்புடன் பின்வாங்கினர்

அச்சுவேலி, ஜூன் 17

பலாலி, வளலாய் இராணுவ முகாம்களிலிருந்து அச்சுவேலிப் பகுதியை நோக்கி ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முன்னேற்ற நடவடிக்கை நேற்று விடுதலைப் புலிகளினால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது.

எதுவித உயிர்ச்சேதமும் இன்றி விடுதலைப் புலிகள் இத் தாக்குதலை முறியடித்தனர். இராணுவத்தினர் பலத்த இழப்புகளுக்கு மத்தியில் மீண்டும் முகாமைச் சென்றடைந்தனர்,

இராணுவத்தினர் ஷெல் தாக்குதல்களை நடத்திக்கொண்டும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவாறும் டாங்கிகள் சகிதம் காலை 6.00 மணி அளவில் தமது நடவடிக்கையை ஆரம்பித்திருந்தனர்.

அச்சுவேலி தோப்புப் பகுதியை நோக்கியும் அச்சுவேலி பஸ் நிலையப் பகுதியை நோக்கியும் அவர்கள் முன்னேற முயன்றனர்.

இராணுவத்தினரை எல்லா முனைகளிலும் எதிர்கொண்டனர் விடுதலைப் புலிகள்.

இராணுவத்தினரை மேலும் முன்னேறவிடாது புலிகள் எதிர்த்தாக்குதல் நடத்தினர்.

சுமார் ஏழரை மணி நேரம் இடம்பெற்றமோதலை அடுத்து இராணுவம் பின்வாங்கி முகாமைச் சென்றடைந்தது.

இராணுவத்தினர் நடத்திய ஷெல் மற்றும் தாக்குதல்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஷெல் தாக்குதலில் ஒருவர் பலி 10 பேர்வரை காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், ஜூன் 17

அச்சுவேலிப்பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். 10 பேர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை 6.30 மணி முதல் பிற்பகல் வரை அச்சுவேலிப் பகுதியை நோக்கி இராணுவத்தினர் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலால் படுகாயப்பட்ட இராசையா என்ற ஆசிரியர் மருத்துவமனையில் உயிரிழந்தார்.

10 பேர் காயமடைந்தனர்.

அச்சுவேலிப் பகுதியில் 3 வீடுகள் சேதமடைந்தன. கால்நடைகளுக்கும் காயம் ஏற்பட்டது.

ஆவரங்காலைச் சேர்ந்த தங்கராசா திபன் (வயது 23) குகனேஸ்வரன் (வயது 20], ஆ. நாகன் [வயது 65], வல்லி தெய்வேந்திரம் (வயது 48) அச்சுவேலி வடக்கைச்சேர்ந்த பி. சுந்தரம் (வயது 54), அச்சுவேலியைச் சேர்ந்த எஸ். சுரேஷ்குமார் (வயது 21) சாந்தா (வயது 25) வி. ரதி (வயது 23) பத்தமேனியைச் சேர்ந்த மாணிக்கம் மார்க்கண்டு (வயது 65), ரி. கோகிலம்மா (வயது 51) ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-15)

வீடுகள், கடைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 17

அச்சுவேலிப் பகுதியில் பல கடைகள் இராணுவத்தினரால் உடைக்கப்பட்டு பல இலட்சம் பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

கடைகளில் இருந்த பொருள்கள் வெட்டிச் சேதமாக்கப்பட்டுள்ளன.

சில வீடுகள், கடைகள் எரிக்கப்பட்டுள்ளன. டாங்கிகள் ஓடிய இடங்களில் மதில்கள், வீடுகள் சேதமடைந்துள்ளன. பல இடங்களில் வேலிகளும் எரிக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவுச் சங்க வெதுப்பகத்தில் மூன்று மூடை மாவு, இரண்டு பரல் தேங்காய் எண்ணெய் வெட்டி அழிக்கப்பட்டிருந்தன.

எரிபொருள் கடைகளும் உடைக்கப்பட்டு எரிபொருள் ஊற்றி அழிக்கப்பட்டிருந்தது.

சுப்பசொனிக் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 17

நேற்றுக் காலை 6-30 மணியளவில் யாழ். வான்பரப்பில் நுழைந்த விமானப்படையின் இரு 'சுப்பசொனிக்' விமானங்கள் அச்சுவேலியை அண்டிய பகுதிகளை நோக்கி குண்டு வீச்சை நடத்தின.

இந்த சுப்பசொனிக் விமானங்கள் வெற்றிலைக்கேணி பகுதி ஊடாக வந்து வடமராட்சி, அச்சுவேலி, தொண்டமானாறு பகுதிகளை வட்டமிட்டபின் கடல் பிராந்தியப் பகுதியில் குண்டுகளை வீசிவிட்டு வந்த வழியே வேகமாகத் திரும்பிச் சென்றன. [இ-3-11-155-15)

பாலதீவுக் கடலில் மூன்று மீனவரைக் காணவில்லை

குருநகர், ஜூன் 17

கடந்த புதனன்று பாலதீவு கடலில் கடற்படையினர் நடத்திய மற்றொரு தாக்குதலில் மூன்று மீனவர்கள் காணாமற் போய்விட்டனர் என்று அஞ்சப்படுகிறது.

குருநகரைச் சேர்ந்த அருளப்பு அன்ரன் யூலியன் (வயது 49), பெனடிக்ற் அல்போன்ஸ் (வயது 50), சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை [வயது 53] ஆகியோரே இன்னமும் கரைதிரும்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ 51)

உரிமைகளை விட்டுக் கொடுக்காத தீர்வுக்கே தயாராக இருக்கிறோம்

லோறன்ஸ் திலகர் கூறுகிறார்

பாரிஸ், ஜூன் 17

"நாம் சமாதானக் கதவுகளை திறந்தே வைத்திருக்கிறோம்; ஆனால் எமது உரிமைகளை சிறிதளவும் விட்டுக் கொடுக்காத தீர்வுக்கே நாம் தயாராக இருக்கிறோம்"

விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பிரதிநிதி திரு. லோறன்ஸ் திலகர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் தாயகத்தை அங்கீகரிக்கக்கோரி பிரான்ஸில் நடைபெற்ற பேரணியின் முடிவில் நடந்த கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இப்பேரணி பிரான்ஸின் குடியரச மையமான றிபப்ளிக் என்ற இடத்தில் ஆரம்பித்து பஸ்ரில்லே என்ற இடத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

45 ஆயிரம் தமிழர்களை ஜேர்மனி திருப்பி அனுப்பும்

கொழும்பு, ஜூன் 17

இலங்கைத் தமிழர்களுக்கு ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கொடுக்கத் தேவையில்லை என்பதால் அங்கு அரசியல் தஞ்சம் கோரியுள்ள 45 ஆயிரம் தமிழர்களை திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

கொழும்பு வந்துள்ள ஜேர்மன் அரசு பிரதிநிதிகள் மேற்கண்ட தகவலை தெரிவித்ததாக ரோய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இலங்கையில் நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு வந்த ஜேர்மன் அரசு பிரதிநிதிகள் குழு கொழும்பில் அரசு தலைவர்களையும், தமிழ்த் தலைவர்களையும் சந்தித்து பேச்சு நடத்தியது. [இ-8]

தலதா மாளிகைக்கு பலத்த பாதுகாப்பு!

கொழும்பு, ஜூன் 17

கண்டியில் உள்ள தலதா மாளிகைக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்று அச்சம் நிலவியதை அடுத்து கடந்த திங்கட்கிழமை முதல் தலதா மாளிகை வளாகத்தில் புதிய பாதுகாப்பு விதிகள் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

தலதா மாளிகைக்கு முன்பாகச் செல்லும் பாதையில் வாகனப் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மாளிகைக்கு முன்பாக மக்கள் கூடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

ஆயுதம் தாங்கிய பொலீஸார் 24 மணி நேரமும் அங்கு காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஐ-3)

மற்றொரு மீனவரின் சடலம்

குருநகர், ஜூன் 17

மண்டைதீவுக் கடலில் கடந்த புதனன்று காலை கடற்படையினர் நடத்திய வெறியாட்டத்தில் காணாமற்போன மற்றொரு மீனவரின் சடலம் நேற்று சூட்டுக் காயங்களுடன் கரை ஒதுங்கியது.

அலெக்ஸாண்டர் அந்தோனிப்பிள்ளை (லோறன் எனகு வயது 45) என்ற மீனவரின் சடலமே கரையொதுங்கியது.

இவருடன் சேர்த்து அச்சம்பவத்தில்] உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இரண்டாக அதிகரித்துள்ளது. (ஐ-15-51)

வெப்பத்துக்கு 191 பேர்பலி

புதுடில்லி, ஜூன். 17

வட இந்தியாவில் வெயில் கொடுமையால் இதுவரை 191 பேர் மரணமாகி உள்ளனர்.

குறிப்பாக ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், பஞ்சாப், மத்தியபிரதேசம், டில்லி, அரியானா ஆகிய பகுதிகளிலேயே கடும் வெயில் எறிக்கிறது.

பகலில் அனல் காற்று [illegible]றது. வீதிகளில் தார் உருகி ஓடுகிறது. [ஐ]

வடமராட்சி பகுதியில் இயல்பு நிலை பாதிப்பு

வல்வெட்டித்துறை, ஜூன் 17

நேற்று இடம்பெற்ற ராணுவ நடவடிக்கையின் போது வடமராட்சிப் பகுதியில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

ஷெல் தாக்குதல் காரணமாக வல்லை முனியப்பர் ஆலயப்பகுதி சேதம் அடைந்தது.

வல்லை வீதியால் எதுவித போக்குவரத்தும் நடைபெறவில்லை.

வடமராட்சியில் உள்ள பாடசாலைகள், மற்றும் வர்த்தக நிலையங்கள் செயல் இழந்து காணப்பட்டன. (இ-155)

அச்சுவேலியில் மின்னல் தாக்குதலாம்

கொழும்பு, ஜூன் 17

பலாலி முகாமைச் சூழவுள்ள பகுதியில் படையினர் நேற்று 'மின்னல் தாக்குதல்' நடவடிக்கையை மேற்கொண்டனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்கா தெரிவித்தார்.

அச்சுவேலிப் பகுதியிலிருந்து பலாலி தளத்தின் மீது நடத்தப்படும் தாக்குதல்களைத் தடுப்பதற்காகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது, [ஐ-6]

வயோதிபரை பிடித்துச் சென்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 17

அச்சுவேலி பத்தமேனிப் பகுதியில் நேற்றுக் காலை வயோதிபர் ஒருவர் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டார் எனத் தெரிய வருகிறது. [இ-3

ஹபரண புறப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 17

பருத்தித்துறையில் நேற்று மாலை இறக்கி முடித்த பின்னர் 'ஹபரண' கப்பல் திருகோணமலைக்குப் புறப்பட்டுச் சென்றது.

இக்கப்பல் காங்கேசன் துறைக் கடலில் — துறைமுகத்திலிருந்து 5மைல்களுக்கு அப்பால் — சென்றதும் கடற்படையினர் அங்கு சென்று சோதனை நடத்தினர் எனத் தெரியவந்தது.

இதேவேளை —

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் அதிகாரியான மேரி பேர்கின்ஸ்ும் திருகோணமலைக்கு பயணமானார். (இ-3)

மக்கள் பெருமளவு இடம்பெயர்வு

அச்சுவேலி, ஜூன் 17

நேற்று இடம்பெற்ற ராணுவ நடவடிக்கையை அடுத்து அச்சுவேலி, தோப்பு, நவக்கிரி, தச்சன்கலட்டி, பாணிகலட்டி, நாவற்காடு, புத்தகலட்டி, ஆவரங்கால் பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர்ந்தனர்.

இடம்பெயர்ந்தவர்கள் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, கோப்பாய் றோமன் கத்தோலிக்க தேவாலயம் ஆகியவற்றில் தங்கியிருக்கக் காணப்பட்டனர்.

பலர் உறவினர்களுடன் தங்கியிருந்தனர்.

பாதுகாப்பற்ற பகுதிகளிலிருந்து மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்ததால் உயிர்ச்சேதங்கள் பெருமளவு தவிர்க்கப்பட்டன — என்று தெரிவிக்கப்பட்டது.

பெரும்பாலான ஷெல்கள் அச்சுவேலி வடக்கு, தெற்கு பகுதிகளிலேயே விழுந்து வெடித்தன.

இடம் பெயர்ந்தவர்களுக்கு தொண்டர் நிறுவனங்கள் நேற்று உணவு வழங்கின.

நேற்றுக் காலை அச்சுவேலி சந்தை வழமையாகக் கூடிய போதே படையினரின் தாக்குதல் ஆரம்பமானது.

சந்தையில் கூடியிருந்த மக்கள் தமது சைக்கிள்களை அப்படியே கைவிட்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி விரைந்தனர்.

அச்சுவேலிச் சந்தைப் பகுதியில் நூற்றுக்கணக்கான சைக்கிள்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டன. (இ-155-11)

அவசர சிகிச்சை மேற்கொள்ள

கொழும்பு ஆஸ்பத்திரிகளில் விசேட முன்னேற்பாடுகள்!

கொழும்பு, ஜூன் 17

அசம்பாவிதங்களில் பாதிக்கப்படுவோருக்கு உரிய நேரத்தில் அவசர சிகிச்சையை வழங்கும் வகையில் கொழும்பு பெரியாஸ்பத்திரியிலும், ஏனைய பகுதிகளில் உள்ள பிரதான ஆஸ்பத்திரிகளிலும், சகல முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

தலைநகரில் கடந்த வாரம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரிகளில், மருத்துவ ஆலோசகர்கள், சத்திர சிகிச்சை நிபுணர்கள், மருத்துவ உத்தியோகத்தர்கள் ஆகியோரும் உஷார்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ-5)

கட்டுநாயக்கா குண்டுவெடிப்பு

பயன்படுத்திய வெடிமருந்து இலங்கைக்கு புதியதாம்!

கொழும்பு. ஜூன் 17

கட்டுநாயக்கா விமான நிலைய குண்டு வெடிப்புக்கு பயன்படுத்திய வெடிமருந்து இலங்கைக்குப் புதியது.

இப்படி அரசாங்கபகுப்பாய்வாளர் திணைக்கள விசேட நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

ஆர் டி ஈ எனப்படும் இந்த வகை புதிய வெடிமருந்து சர்வதேச பயங்கரவாத குழுக்கள் மத்தியில் பிரபல்யம் வாய்ந்தது என்றும் —

ஆனால் இலங்கையில் அது இடைபதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த குண்டு வெடிப்புடன் நெருங்கிய தொடர்புடைய நான்கு பேரின் விவரங்கள் இடைத்துள்ளன என்றும் —

அவர்களில் சிலர் அடுத்த சிலநாட்களில் கைது செய்யப்படுவார்கள் எனவும் — இரகசியப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (இ-5-14)

இராணுவ முகாமைப் போன்று காட்சி அளிக்கும் மட்டு. நகரம்

அங்கு சென்று திரும்பிய பி.பி.ஸி செய்தியாளர் தகவல்

கொழும்பு, ஜூன் 17

ஒரு இராணுவ முகாம் போன்று மட்டக்களப்பு நகரம் காட்சி அளிக்கிறது.

—பி. பி. ஸியின் கொழும்பு செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்புக்கு சென்று திரும்பிய அவர் தாம் அங்கு நேரில் கண்ட நிலைமைகளை விவரித்துள்ளார்.

[illegible]

இராணுவ முகாமாக மாற்றப்பட்ட நகரமாக மட்டக்களப்பு காணப்படுகிறது.

அங்குள்ள அனைத்து பொலீஸ் நிலையங்களும் முட்கம்பி வேலிகளால் சூழப்பட்டுள்ளன. முக்கிய இடங்களில் எல்லாம் பாதுகாப்பு காவலரண்கள் நிறுவப்பட்டுள்ளன.

இராணுவ வாகனங்கள் அங்கும் இங்குமாக ஓடித் திரிகின்றன. வீதியால் செல்பவர்கள் [illegible]ளில் நிறுத்தப்பட்டு "முகமூடி"களின் முன்னால் வரிசையாக செல்வதைக் காணமுடிகிறது.

படை அதிகாரிகள் பீதியுடன் நடமாடுகின்றனர்.

மட்டக்களப்பு நகரத்தின் கட்டுப்பாட்டை மீண்டும் கைப்பற்றுவதே படையினரின் தற்போதைய நோக்கமாகும்.

தற்போது நடக்கும் மோதல்களில் பெரும்பாலும் சிக்குண்டிருப்பது பொதுமக்களே ஆவர்.

கால் துண்டிக்கப்பட்ட நிலையில் பல பெண்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில்

([illegible]ம் பக்கம் பார்க்க)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நவாலி தெற்கு, கலையரசு வீதியில் முந்நூறுக்கு மேற்பட்ட பனை மரங்களுடன் 35 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: நா. மகேசன், நவாலி தெற்கு. [37088]

8''x2'' முதிரையினாலான மேல் புறம் கண்ணாடி பொருத்தப்பட்ட அலுவலக மேசை, நிங்சாவி செற், 40 PC Socket Wrench [சொக்கெற் றெஞ்ச் செற்] விற்பனைக்குண்டு. தொடர்பு 60, கண்டி வீதி, கச்சேரி, யாழ்ப்பாணம். [37104]

Pure Bred Pomeranian நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். [37096]

அடை வைக்கக்கூடிய நல்லினக் கோழி முட்டைகள், பெரிய சாப்பாட்டு முட்டைகள் மற்றும் இதரை வாழைக் குட்டிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (37095)

நல்ல நிலையில் உள்ள இங்கிலன்ட் றலி சைக்கிள்— 28 விற்பனைக்குண்டு. தொடர்பு: A. கனகசிங்கம், இல. 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம். [37114]

தவறிவிட்டது

13-6-95 கொழும்பில் இருந்து வரும்பொழுது தாண்டிக்குளத்திற்கும் ஆலங்கேணிக்குமிடையில் திருமணப்படங்கள் அடங்கிய அல்பம் கை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். வேலுப்பிள்ளை தவபாக்கியம் ''கணேஷ் வாசா'' தொட்டிலடி சங்கானை. தகுந்த சன்மானம் வழங்கப்படும். [8588]

இறைச்சிக் கோழி

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஸ்தாபனத்திற்கு முகப்பில் இருக்கும் விற்பனை நிலையம் எங்களுடையதல்ல. உங்கள் வசதிக்காக எங்கள் வாசலில் Nallur Video Centre பெயர்ப்பலகையுண்டு. [37094]

சோதிடம்

வெளியூர் ஜெனன ஜாதகக் குறிப்பு உடன் எழுதிக் கொள்ள மற்றும் ஜாதகக் குறிப்பு பலன் பார்க்க ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், இல. 158, கோவில் வீதி, நல்லூர். [37115]

மணப்பெண் தேவை

இந்து 29 வயது லைப்ரேறியனுக்கும், சைவ போசன 39 வயது படித்த வர்த்தகருக்கும், கத்தோலிக்க 38 வயது பட்டதாரிக்கும், 30 வயது கனடாவுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். [37108]

குற்றமற்ற 34 வயது டாக்டருக்கும், 7இல் செவ்வாய் 35 வயது டாக்டருக்கும், செவ்வாயுள்ள 33 வயது மின் விரிவுரையாளருக்கும், குற்றமற்ற 36 வயது கனடா வந்தவருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். [37109]

மணமக்கள் தேவை

குற்றமற்ற 34, 33 வயது பட்டதாரிக்கும், 36 வயது ஆசிரியருக்கும், 35 வயது பெண் டாக்டருக்கும், 40 வயது படித்த பெண்ணுக்கும், சைவ போசன 26 29, 27 வயதுப் பெண்களுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [37110]

G.C E. A/L

க. பொ. த. உயர்தரம் பௌதிக இரசாயனம். ஆக்கம்: ஜே. கே. பி. ஆரியரத்ன. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-1494]

புலமைப்பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் புதிய பாடத்திட்டத்திற்கேற்ப 18-6-95 ஞாயிறு வெளியிடப்படும். ஆண்டு 3, 4 மாதிரி வினாத்தாள் 25-6-95 ஞாயிறு வெளியிடப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [37098]

புலமைப்பரிசில்

ஆண்டு - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான இலங்கை பரீட்சைத் திணைக்கள மாதிரி வினாக்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட முன்னோடிப் பயிற்சி. ஆக்கம். பொன். சக்திவேல், Bright இன் கல்வி வெளியீடு. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-1493)

பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டு 3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L வகுப்புகளுக்காக ஒவ்வொரு மாதமும் பயிற்சி வினாத்தாள்கள் [விடைகளுடன்] எம்மால் வெளியிடப்படுகின்றன. மே மாதத்திற்கான பயிற்சி வினாத்தாள்கள் 27-5-95 சனி முதல் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8557]

விசேஷ அன்ரனா

ரூபவாஹினி மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ T V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல் T. V. செட், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி' சாவகச்சேரி. [சி-1489]

லொறி வாகன சேவை

புழுக்கொடியல் மற்றும் பனை உற்பத்திகளை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குக் கொண்டு செல்லக்கூடிய லொறிச் சொந்தக்காரர் உடன் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்பு அதிகார சபைக் கட்டடம்,
யாழ்ப்பாணம்.

(சி-1507)

கண்ணீர் அஞ்சலி

திருமதி இந்துமதி சுபாஸ்கரன்

யா / இணுவில் மத்திய கல்லூரியில்
விஞ்ஞான ஆசிரியராக கடந்த எட்டு (8) வருடங்களாகக் கடமையாற்றி 1995 - 06 - 15 ஆம் திகதி காலமாகிய

திருமதி இந்துமதி சுபாஸ்கரன்
அவர்களுக்கு

எமது இதய பூர்வமான அஞ்சலியைச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் கணவர், பிள்ளைகள், குடும்ப உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் இத்தால் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர்கள்

யா/ இணுவில் மத்திய கல்லூரி,
இணுவில், சுன்னாகம்.

[37113]

ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
பண்டிதர்
பொன்னம்பலம் ஜெகநாதன்
(இளைப்பாறிய ஆசிரியர், வேலணை)

தோற்றம்: 10 - 08 - 1908
மறைவு: 29 - 05 - 1994

திதி: இன்று 17 - 06 - 95

அஞ்சலிப்பா

வேலணையூர் பெற்றெடுத்த
தமிழறிஞர் பண்டிதர்பொன் ஜெகநாதன்
நூலமுதாய் யாழ்ப்பாணத்
தமிழரசர் சரித்திர நூலுடன் சிலப்பதிகாரத்தின்
சாலுரை நல்கியவர் ஈழத்(து)
அடியார்க்கு நல்லாரென் றுரைக்கும் நாலும்
வேலணையூர்ப் பெருங்குளத்தில்
மேவுமுத்து மாரிபுகழ் சொல்லும் நூல்பலவுங்
காலமெல்லாம் ஒளிநல்கக்
கனிந்தளித்தார் அன்னவர் தாள் பணிவோமே.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், அன்பர்கள்.

49, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

ஆஸ்பத்திரி ஊழியர் புகைக்கத் தடை

கொழும்பு, ஜூன் 17

ஆஸ்பத்திரி ஊழியர்கள் தமது கடமை நேரங்களில் புகை பிடிப்பதை சுகாதார அமைச்சு தடைசெய்துள்ளது.

வைத்தியசாலை கன்டீன்களிலும் 'சிகரெட்' விற்பனை தடைசெய்யப்படும் என்றும்— புகைத்தலுக்கான தடையை மீறும் ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. (ஒ-5)

ஜி. சி. ஈ. பரீட்சைக்கு விண்ணப்பம்

கொழும்பு, ஜூன் 17

1995 டிசம்பரில் நடைபெறவுள்ள ஜி. சி. ஈ. சாதாரண தர பரீட்சைக்கான விண்ணப்பங்களை பரீட்சைத் திணைக்களம் கோரியுள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை அடுத்த மாதம் 17ஆம் திகதி வரை அனுப்பமுடியும் யாழ் மாவட்டத்தில் இம்முறை 41 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது. [ஐ-5

இதழியல் கற்கை நெறி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இதழியல் அடிப்படைக் கற்கை நெறி தொகுதி 4 இன் ஆரம்ப வைபவம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு செல்வநாயகம் மண்டபத்தில் இடம்பெறும். இக் கற்கை நெறி பயில ஆர்வம் கொண்டோர் உடனடியாக புறநிலைப் படிப்புகள் அலகிற்கு விண்ணப்பிக்கும்படி இணைப்பாளர் கோருகின்றார். [க]

காலி நகரின் பாதுகாப்புக்கு மீண்டும் ராணுவம் அனுப்பப்படும்

கேணல் ரத்வத்த உறுதி

கொழும்பு, ஜூன் 17

காலி நகருக்கு பாதுகாப்பு வழங்க மீண்டும் அங்கு இராணுவத்தினர் அனுப்பப்படுவர் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த உறுதி அளித்துள்ளார்.

வன்செயல்கள் தணிந்ததை அடுத்து காலி நகரில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இராணுவத்தினர் கடந்த வாரம் அங்கிருந்து வாபஸ் பெறப்பட்டிருந்தனர்.

பதுளை மாவட்ட எம். பி. திரு. டி. வி. சென்னன், நுவரெலியா மாவட்ட எம். பி. திரு. எம். சிவலிங்கம் ஆகியோர் அமைச்சர் அனுருத்த ரத்வத்தையை நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் சந்தித்து காலி நகர பாதுகாப்புக்கு மீண்டும் இராணுவத்தினரை ஈடுபடுத்துமாறு கேட்டுக்கொண்டனர்.

அதனை அடுத்தே அமைச்சர் ரத்வத்த இவ்வாறு உறுதியளித்தார். (ஐ-ஒ)

குடும்பப் பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

உடல் பூராவும் எரிந்த நிலையில் கடந்த 14 ஆம் திகதி நள்ளிரவு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இளம் குடும்பப் பெண் ஒருவர் 15 ஆம் திகதி காலை அங்கு மரணமானார்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த சத்தியமூர்த்தி சந்திரகலா (வயது 18) என்ற குடும்பப்பெண்ணே மரணமானவர் ஆவார். (க-15)

ஆயுதங்கள் கண்டு பிடிப்பு

கொழும்பு, ஜூன், 17

ஜே. வி. பி. அமைப்பினரால் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும், ஆயுதங்கள் சில, திவுலப்பிட்டியிலுள்ள வீடொன்றில் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

உள்ளூர்த் துப்பாக்கிகள் (கல்கட்டாஸ்) மூன்று, ரிவோல்வர் ஒன்று ஆகியனவே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்; சந்தேக நபர் ஒருவர் தலைமறைவாகி உள்ளார். [க-5]

தமிழரின் லயன்களை தாக்க குண்டர் கோஷ்டி முயற்சி!

மோதலில் ஒருவர் மரணம்

கொழும்பு, ஜூன் 17

நூறுபேர் கொண்ட குண்டர்கள் கோஷ்டியொன்று களுத்துறை, கிக்கியான் தோட்டத்தில் உள்ள தமிழர்களுடைய லயன்களை தாக்க முயற்சித்தது.

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற இச்சம்பவத்தை தடுக்க முயன்ற மக்களுக்கும், குண்டர்கள் கோஷ்டியினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், ஒருவர் கொல்லப்பட்டார்.

அப்பாவித் தமிழ் மக்களை தாக்க முயன்ற இச்சம்பவம் பற்றி இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் எம் எஸ் செல்லச்சாமி, பொலீஸ்மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார். [ஐ-5]

கண்டி கச்சேரி முன்பாக

அநாதரவான நிலையில் நின்ற வாகனத்தால் பீதி!

கொழும்பு, ஜூன் 17

அநாதரவாக விடப்பட்டிருந்த வாகனம் ஒன்று அதில் குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சத்தினால் பாரம் தூக்கி மூலம் பொலீஸாரினால் பொலீஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டது

இச்சம்பவம் அண்மையில் கண்டியில் இடம்பெற்றது. கண்டி கச்சேரிக்கு முன்பாக அநாதரவான நிலையில் இந்த வாகனம் நிறுத்தப்பட்டிருந்தது.

உடனடியாக குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினர் அழைக்கப்பட்டு, வாகனம் பரிசோதிக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்து அது அப்புறப்படுத்தப்பட்டது. (ஐ-5)

உ

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய மகா கும்பாபிஷேகம்

18 — 06 — 1995
முத்தமிழ் குருமணி சர்வேஸ்வரக் குருக்கள்
தலைமையில்
15 — 06 — 1995 இல் ஆலய கிரிகைகள் ஆரம்பமாகி
17 — 06 — 1995 இல் காலை 7 மணி முதல்
மாலை 4 மணி வரை
எண்ணைக் காப்பு சாத்தும் வைபவமும்
18 — 06 — 1995 காலை 11 மணி அளவில்
மகா கும்பாபிஷேகமும்
நிகழ இருப்பதால் அடியார்கள் வருகை தந்து தரிசித்து
எம் பெருமானுடைய அனுக்கிரகத்தை
பெற்று உய்யுமாறு வேண்டிக்கொள்கிறோம்

- ஆலய பரிபாலன சபை.

[37116]

அத்தியார் இந்துக் கல்லூரியில்

''நாமிருக்கும் நாடு நமது''

- நாடகம் -

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால், இன்று நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடத்தப்படவிருந்த ''நாமிருக்கும் நாடு நமது'' என்னும் நாடகம் தவிர்க்க முடியாத காரணத்தினால் 02 - 07 - 1995 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

அன்பளிப்பு:-
100/-, 50/-, 20/- மாணவர்களுக்கு 10/-

தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்

(சி-1508)

கண்ணீர் அஞ்சலி

திருமதி இந்துமதி சுபாஸ்கரன்

(ஆசிரியை, யா/இணுவில் மத்திய கல்லூரி)

எமது கல்லூரி ஆசிரியர் திரு. அ. சுபாஸ்கரன் அவர்களது அன்புத் துணைவியாரின் மறைவைக் கேட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளோம்.

அன்னாரது பிரிவினால் துயருறும் துணைவர், பிள்ளைகள், குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகிறோம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர்.

[illegible]
மானிப்பாய் இந்துக் கல்லூரி

[சி-1510]

தொழிநுட்பக் கல்லூரி

இறுதிப் பரீட்சைகள் -1994

கீழ்க்காணும் பயிற்சி நெறிகளுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 1995. 06 19 ஆம் திகதி ஆரம்பமாகும். பரீட்சைக்கான அனுமதி அட்டை, நேரசூசி என்பவற்றை பகுதித் தலைவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாமென்பதையும் அறியத்தருகிறேன்.

பயிற்சி நெறிகள்

1. தொழிற் கற்கைகளிலான தேசிய தராதரப்பத்திரம் - (N. C. B S)
2. பொறிவலர் தொழில் பயிற்சி தேசிய தராதரப் பத்திரம் -(N C. E. C P)
3. கணக்கியலிலான உயர் தேசிய டிப்ளோமா -3ம் வருடம் (புதிய பாடத்திட்டம்) (H N. D A. III)
4. கணக்கியலிலான உயர் தேசிய டிப்ளோமா -4ம் வருடம் (H N. D A IV)

க. ஜெயரெட்ணம்,
அதிபர்.

தொழிநுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1995 06 16

(சி/ 1512)

நினைவுகள் நீங்காத

ஓராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: 08 — 11 — 1957
பரமன் அடியில்: 28 — 06 — 1994

செல்வி வசந்தி சண்முகநாதன்

திதி: 17-06-1995

இல்லத்தில் ஒளி வீசிய எம் தீபமே - துன்ப
வெள்ளத்தில் எமை ஆழ்த்திச் சென்றனையோ
ஆண்டுகள் நூறு சென்றாலும்
ஆறுமோ எம் துயர், உம் நினைவுகள்.

என்றும் நீங்காத நினைவுடன்
அப்பா, மம்மி, அண்ணா,
அக்கா, ரவி, ரகு,
மைத்துனர், மைத்துனிமார்,
மருமக்கள், பெறாமக்கள்.

''மலர் வாசம்''
டச் வீதி,
உடுவில் மேற்கு.
சுன்னாகம்.

(37119)

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

இவர்களா பிரதிநிதிகள்?

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு, நாடாளுமன்றத்தில் ஆதரவு வழங்கிவரும் தமிழ்க் கட்சிகள் தமது ஆதரவை உடனடியாக வாபஸ் பெற வேண்டும்.

இவ்வாறு கொழும்பில் இயங்கும் மற்றொரு தமிழ்க் கட்சியான தமிழ்க் காங்கிரஸின் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவையும் தமிழ்க் கட்சிகள் பகிஷ்கரித்து விட வேண்டும் என்பதும் இவரது கோரிக்கையாகும்.

இவர் தமது கோரிக்கையை நியாயப்படுத்துவதற்காகப்பல காரணங்களைத் தெரிவித்திருக்கிறார். அந்தக் காரணங்களுக்குரிய அவரது கருத்துக்கள் எல்லாமே ஏற்புடையவை அல்ல,

எனினும், அரசாங்கத்திடம் தமிழர் பிரச்சினைக்கென்று அரசியல் தீர்வு இல்லாமையால் தமிழ்க் கட்சிகள் அரசுக்கு வழங்கும் தமது ஆதரவை விலக்கிக்கொள்ள வேண்டும் என்ற பிரதான காரணம் தர்க்க ரீதியானதாகும்.

அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதற்கு தெற்கில் கருத்தொற்றுமை தேவை என்ற அரசின் மாற்றமடைந்துள்ள பிந்திய நிலைப்பாடு சிங்கள இனவாதிகளைச் சாந்தப்படுத்தும் முயற்சியே என்றும் சரியாகக் கண்டுபிடித்திருக்கிறார் குமார் பொன்னம்பலம்.

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கென ஆணை பெற்றுப் பதவியில் அமர்ந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு, அதனை அடியோடு ஒதுக்கி விட்டு—

இராணுவத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு— தமிழர்களுக்கு எதிராகப் போர் தொடுத்து பெரும் எண்ணிக்கையில் கொன்று குவிப்பதற்கு— அரசு கொடுக்கை இழுத்துக் கட்டி நிற்கிறது!

கொழும்பில் உள்ள ஏஜென்சிச் செய்தியாளர்கள், மற்றும் அரசியல் அவதானிகள் இதனைப் புரிந்து கொண்டது போல, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்குப் புரிந்து கொள்ள முடியாமல் போனது ஏன்?

வடபகுதி மீதான பெரும் இராணுவத் தாக்குதலுக்கு ஜனாதிபதி சந்திரிகா பச்சைக் கொடி காட்டிய பின்னர்— தமிழர்களை இனப்படுகொலை செய்யுமாறு அரச படைகளுக்கு அனுமதி வழங்கிய பின்னர் — தமிழ்க் கட்சிகள் அரசுக்கு ஆதரவு வழங்குவது வெட்கமில்லையா?

நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் தமிழர்களுக்கு அரசியல் விடுதலையையோ, விடிவையோ, விமோசனத்தையோ தராது என்பது ஏற்கனவே கிடைத்த அனுபவம். அப்படியிருந்தும் தமது வசதி, வாய்ப்புக்களுக்காக அங்கு சென்றவர்கள் —

தமிழர்களை அழிக்கப் போவதாக சந்திரிகா அறிவித்த பின்னரும், அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்ளத் தயாராக இல்லை!

சந்திரிகா அரசின் நாடாளுமன்றப் பலம் தமிழ் எம். பிக்களின் கையிலேயே தங்கியுள்ளது. அரசுக்கு வழங்கும் ஆதரவை வடக்கு — கிழக்கு தமிழ் எம். பிக்கள் விலக்கிக் கொண்டாலே அது ஆட்டம் காண நேரிடும்.

இத்தகைய ஒரு நல்ல சந்தர்ப்பத்தில் —

தமிழ் மக்களை அழிப்பது அவர்களுக்கு எதிராகப் போர் நடத்துவது என்ற அரசின் தீர்மானத்தை தடுத்து நிறுத்துவதற்கு தமிழ் எம். பிக்கள் எனப்படுவோர் தமது பலத்தைப் பயன்படுத்த வேண்டும்.

ஆனால், தமிழ் எம். பிக்கள் எனப்படுவோர் அது குறித்துஇன்னும்சிந்தித்ததாகவும் இல்லை! தமிழ் மக்களின் உயிர்களைவிட, அவர்களுக்கு பதவியும், வசதிகளும் தான் முக்கியம். எனவே அவர்களிடம் இப்படி ஒரு ''தியாகத்தை'' எதிர்பார்ப்பது பொருத்தமில்லைத் தான்! இவர்கள் தானா தமிழர்களின் பிரதிநிதிகள்?

புலிகளின் தற்கொலை படை தமிழ்நாட்டுக்குள் ஊடுருவல்

சென்னை, ஜூன் 17

விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படை குறிப்பிட்ட சில தாக்குதல் இலக்குடன் தமிழ்நாட்டுக்குள் ஊடுருவியிருப்பதாக தமிழ்நாடு சட்டப் பேரவையில் காங்கிரஸ் கட்சித் தலைவரான திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியை தாக்குவதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்றும் கூறினார்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஆளும் அ. தி. மு. க. அரசும் ஆதரித்து வருவதாக பாலசுப்பிரமணியம் குற்றம் சாட்டினார்.

விடுதலைப் புலிகள் ஆதரவாளர்களுக்கு மாநில அரசு தொடர்ந்து அனுசரணையாக நடந்து கொண்டால் அதற்கு எதிராக மத்திய அரசின் நடவடிக்கை கோரப்படுமென்றும் அவர் கூறினார்.

அண்மையில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை சிலர் பாராட்டி இருப்பதாகவும் இவர்களுக்கு எதிராக மாநில அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியவர்களை சமூக விரோத சக்திகள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

[இ-4]

வெளியூர்தபால்பொதிகளை எடுத்துவர முயற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 17

மாதம் இருமுறைதிருகோணமலையிலிருந்து பருத்தித்துறைக்கு மாவுடன் வந்து திரும்பும் ''ஹபறண'' கப்பலில் வெளியூர் தபால் பொதிகளை எடுத்து வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பில் தேங்கி இருக்கும் 400 இற்கும் மேற்பட்ட தபால்பொதிகளைதிருகோணமலை ஊடாக ''ஹபறண'' கப்பலில் பருத்தித்துறைக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கோரி தபால் மா அதிபருக்கு கடந்த 14 ஆம் திகதி பதில் வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. ச. சடாச்சரநாதன் செய்தி அனுப்பிவைத்துள்ளார்

உணவுச்சாலை லைசென்ஸ்: விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

குடாநாட்டில் உள்ள உணவு நிலையங்களுக்கு உரிமம் (லைசென்ஸ்) பெறுவதற்கான விண்ணப்ப இறுதி நாள் இம்மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கத் தவறும் உணவு நிலையங்களை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், உரிமையாளர்கள் மீது தமிழீழ உணவுச் சட்டத்தின் படி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தமிழீழ சுகாதாரச் சேவைகள் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

உணவு நிலையம் அமைந்துள்ள மாநகர சபை, நகர சபை, பட்டினசபை, கிராமச் சபை அலுவலகங்களில்தமிழீழ சுகாதார சேவைகள் உணவு நிலைய விண்ணப்பங்களை இதுவரை ஒப்படைக்காதோர் அதனை அங்கு பெற்றுப் பூர்த்தி செய்து அவர்களிடமே ஒப்படைத்தல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

கொழும்பில் வேலையற்ற தமிழரை தேடி வலைவிரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

கொழும்பிலுள்ள வீடுகளில் வேலையற்றிருக்கும் தமிழர்களைத் தேடி பொலீஸார் தற்போது வலை விரித்து வருவதாகத் தெரிய வருகிறது.

தற்போது கொழும்பில் பகுதி பகுதியாக வீட்டுச் சொந்தக் காரர்கள் பொலீஸாரால் அழைக்கப்பட்டு கூட்டங்கள் நடத்தப்படுகின்றன

வேலையற்றிருக்கும் தமிழர்கள் எவரையும் வீடுகளில் வைத்திருக்க வேண்டாம் என்று இக் கூட்டங்களில் பொலீஸாரால் பணிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் உள்ள உறவினர்களுடன் தொலைபேசியில் தொடர்பு வைக்க வரும் தமிழர்களையும் வீடுகளில் தங்கவைக்க வேண்டாம் என்றும், அவர்களை வவுனியாவில் இருந்து தொலைபேசித் தொடர்பு வைக்குமாறு கூறச் சொல்லியும் பொலீஸார் மேலும் இக் கூட்டங்களில் அறிவுறுத்தி வருவதாக அறிய வருகின்றது. (க 4)

மிதிவெடியில் சிக்கி சிறுமி கால் இழந்தாள்

வாழைச்சேனையில் பரிதாப சம்பவம்

கொழும்பு, ஜூன் 17

வாழைச்சேனை பகுதியில் உள்ள மீராவோடை கிராமத்தில் கடந்த செவ்வாயன்று காலை சிறுமி ஒருத்தி மிதி வெடியில் சிக்கி கால் ஒன்றை இழந்தார்.

ச. திருமதி என்ற இச் சிறுமி காலையில் எழுந்து வீட்டு வளவின் எல்லைப் பகுதிக்கு சென்ற சமயம் அங்கு புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதி வெடியில் சிக்கியுள்ளார்.

மீராவோடை தமிழ் பாடசாலையில் ஆண்டு 6 வகுப்பில் கல்வி கற்கும் மாணவி இவர்.

(ஐ)

நாட்டின் பல பகுதிகளில் இனவாத சுவரொட்டிகள்

கொழும்பு, ஜூன் 17

வடக்கு- கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி அரசமைப்பு முறையை அறிமுகம் செய்து அதிகாரத்தைப் பரவலாக்கும் முயற்சி என்பது சிங்கத்தைக் கொல்வதற்கு ஒப்பானது.

இந்தக் கருத்து அடங்கிய சுவரொட்டிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அண்மையில் ஒட்டப்பட்டன.

சுவரொட்டிகளுக்கான செலவை ஐக்கிய தேசியக் கட்சிக்குள் சிங்களவர்களை ''இரட்சிப்பவரு''ம் 'மகாராஜா'வுடன் தொடர்புடையவருமான ஓர் அரசியல்வாதி ஏற்றுக் கொண்டார் என ''யுக்திய'' வார இதழ் தெரிவிக்கிறது.

இந்தச் சுவரொட்டிகளை அச்சிடும் பணியை ஆயுதக் கொள்வனவுடன் தொடர்புடைய ஒரு பத்திரிகை நிறுவனத்தின் உரிமையாளரான வைத்திய கலாநிதி பொறுப்பேற்றுக் கொண்டாராம்.

சுவரொட்டியில் உள்ள கவிதையை ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத்தில் போர்க் கவிதைகள் எழுதுவதில் புகழ்பெற்றிருந்த ஒரு புத்தபிக்குவே எழுதியுள்ளாராம்.

[க-10]

எம். பிக்களுக்கு கருத்தரங்கு

கொழும்பு, ஜூன் 16

நாடாளுமன்ற சம்பிரதாயங்கள், சிறப்புரிமைகள், மரபுகள் பற்றி எம். பிக்களுக்கு விளக்கமளிக்கும் வகையிலான கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 22ஆம், 23 ஆம் திகதிகளில் நாடாளுமன்ற கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

அமைச்சர் பெர்னாட் சொய்ஸா, எம். பி டாக்டர் நீலன் திருச்செல்வம், முன்னாள் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் [illegible] சிங்க ஆகியோர் கருத்துரை வழங்குவர். [க-5]

தீர்வுக்கான சமாதான முயற்சியை அரசே மேற்கொள்ள வேண்டும்

சுவிஸ் தமிழ் சம்மேளனம் சந்திரிகாவுக்கு மகஜர்

கொழும்பு, ஜூன் 17

''இனப்பிரச்சினை தீர்வுக்கான சமாதான முன் முயற்சியை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும்''

—இவ்வாறு இலங்கை ஜனாதிபதியைக் கோரும் மகஜர் ஒன்றை சுவிஸ் தமிழ் சம்மேளனம் அங்குள்ள இலங்கை உதவி தூதரக பொறுப்பதிகாரி லோரன்ஸ் லூட்விடம் கையளித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை 2 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் பங்கேற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் இறுதியில் இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் அடங்கியுள்ள விவரம் வருமாறு:-

கடந்த ஆகஸ்டில் பொ.ஐ.மு. அரசு பதவிக்கு வந்தவேளையிலும்— பின்னர் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு கோரி சிங்கள மக்களின் அதிகப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று நீங்கள் ஜனாதிபதியாக வந்த வேளையிலும்— தமிழர் மீதான 40 வருடகால அடக்குமுறைக்குத் தீர்வு கிட்டும் என நாம் நம்பினோம்.

ஆனால், இந்த வருட நிகழ்வுகள் நீதி நியாயங்களின் குரலுக்கு மேலாக, சிங்கள பேரினவாதம் மீண்டும் ஒரு முறை வெற்றி கண்டு விட்டது என்பதையே காட்டுகிறது.

சமாதானத்தை நிலைநாட்டுவதற்கே முன்னுரிமை என்று தேர்தல் பிரசாரங்களின்போது கூறிய நீங்கள்— இப்போது, போரைப் பிரகடனப் படுத்துவதன் மூலமாக சமாதானத்தை நிலை நாட்ட உத்தேசித்திருப்பதாக அறிவித்திருக்கிறீர்கள்.

பொ.ஐ.முவுக்கு நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை இல்லாததால்தான், இராணுவத்தினதும், பேரினவாதிகளினதும் நெருக்குதல்களுக்கு இடம் கொடுத்து, நீங்கள் செயல்படுகிறீர்கள் என எண்ண வேண்டியுள்ளது.

எவ்வாறெனினும், ஜனநாயக நாடு ஒன்றிலே, இராணுவத்தினரை வழி நடத்த வேண்டியது அரசாங்கமே,

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி என்ற வகையில் நீங்கள் உங்கள் பொறுப்பை தட்டிக்கழிக்க முடியாது.

1994 ஒகஸ்டில் வட பகுதிக்கான பொருளாதாரத் தடையைத் தளர்த்திய போது, தமிழ் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை குறைப்பதற்காகவே அவ்வாறு செய்வதாகக் கூறினீர்கள்.

ஆனால், விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையேயான மோதல் தவிர்ப்பு முறிவடைந்ததும், மீண்டும் முற்று முழுதான பொருளாதாரத் தடையை பிரகடனம் செய்திருக்கிறீர்கள்.

கடந்த ஆகஸ்டில் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் நிலை இருந்தபோதும் நீங்கள் தடையை தளர்த்தினீர்கள்.

ஆனால் மீண்டும் இவ்வருட ஏப்ரலில் மோதல்கள் மூண்ட போது தடைகளை முற்றாக பிரகடனப்படுத்தியதன் அர்த்தத்தை எம்மால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

எவ்வாறெனினும், சமாதானத்துக்கான முன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அரசாங்கமே.

—இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் சார்க் உறுப்பு நாடுகளின் தலைவர்கள், சுவிஸ், கனடா, அவுஸ்திரேலியா, நோர்வே ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள், அகதிகளுக்கான சமஷ்டி அலுவலக பணிப்பாளர், அமெரிக்க ராஜாங்க அமைச்சு அதிகாரி ஆகியோருக்கும், ஐரோப்பிய நாடாளுமன்றத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ஒ-5)

ஆலயங்களில்

சண்டிலிப்பாய் வேலற்பதி ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது 26ஆம் திகதி தேர்த் திருவிழா நடைபெறும்.

(ஒ-135-14)

★ ★ ★

மந்துவில் தாளைபடி பிள்ளையார் ஆலய புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும்.

தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் இடம் பெறும். (ஒ-14)

★ ★ ★

வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 26 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (ஒ-152)

★ ★ ★

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயில் வருடாந்த உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் ஜூலை 11 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஒ-111)

★ ★ ★

சாவகச்சேரி சங்கத்தானை வைரவசுவாமி கந்தசாமி ஆலய மகோற்சவம் இன்று சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

(ஒ-117)

ராணுவ வாகனம் மோதியதில் தமிழர் பலி

மட்டக்களப்பு, ஜூன் 17

மரக்கறி ஏற்றி வந்த இராணுவ வாகனம் மோதியதில் விறகு வியாபாரி ஒருவர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு பளகுடா வெளியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மரப்பாலத்தைச் சேர்ந்த ராஜா மயில்வாகனம் என்பவரே பலியானார்.

(ஒ-14)

கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 17

தமிழீழ கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் தையல் கண்காட்சி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் கலட்டி தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெறும்.

(க-5-14)

இரத்தினபுரி கிராமிய வங்கியில்

ரூ. 62 லட்சம் பெறுமதிமிக்க தங்க நகைகள் கொள்ளை!

கொழும்பு, ஜூன் 17

இரத்தினபுரி கிராமிய வங்கியில் சுமார் 62 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், அவை வைக்கப்பட்டிருந்த நேரக் கணிப்பீட்டுப் பெட்டகத்தைத் திறந்து கொள்ளையடிக்கப் பட்டுள்ளன.

குறிப்பிடப்பட்ட ஒரு தினத்தில் - குறித்த நேரத்தில்— மட்டுமே திறக்கக்கூடிய இந்தப் பெட்டகம், எவ்வாறு திறக்கப்பட்டது என்பது பெரும் மர்மமாக உள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக வங்கி ஊழியர் ஒருவர் தேடப்படுகிறார்.

[illegible] வெளியேறாத வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

[illegible] போலிப்பெயரைப் பாவித்து நாட்டைவிட்டு வெளியேறியிருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகம் தெரிவித்தனர். (ஒ-5)

மனித உரிமைகள் செயலணி செயற்பாடுகள் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மனித உரிமைகள் செயலணி ஒன்றை நிறுவி அதன் செயற்பாடுகள் பற்றிய பணிப்புரைகளை நேற்று விடுத்துள்ளார்.

ஒருவரை கைதுசெய்வதற்கு அல்லது தடுப்புக் காவலில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்அதிகாரி, தான் கைது செய்யும் நபருக்கு அல்லது அவரின் உறவினர் அல்லது நண்பருக்கு தனது பெயர் மூலமும் பதவிப் பெயர் மூலமும் தம்மை அடையாளம் காட்டிக் கொள்ள வேண்டும்.

கைது செய்யப்படும் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்படும் ஒவ்வொருவருக்கும் அவர் கைது செய்யப்படுவதற்கான காரணம் தெரிவிக்கப் பட வேண்டும்.

கைது செய்யப்படும் போது அல்லது தடுத்து வைக்கப்படும் போது கைது செய்யும் அதிகாரியின் பெயர் பதவிப் பெயர் மற்றும் விவரங்கள் அடங்கிய பற்றுச் சீட்டு ஒன்றும் வழங்கப்பட வேண்டும்.

12 வயதுக்கு உட்பட்ட சிறுவர் அல்லது பெண் பிள்ளைகள் கைது செய்யப்படும் போது அல்லது தடுத்து வைக்கப்படும் போது அவர்கள் விரும்பும் ஒருவர் விசாரணை செய்யப்படும் இடத்திற்கு அனுமதிக்கப்படல் வேண்டும்.

இவ்விதம் கைதுசெய்யப்படும் அல்லது தடுத்து வைக்கப்படும் சிறுவர் அல்லது பெண்பிள்ளை கூடியவரை ஆயுதப்படை அல்லது பொலீஸ் படையின் பெண் பிரிவில் அல்லது பெண் இராணுவ அதிகாரி அல்லது பெண் பொலீஸ் அதிகாரியின் பாதுகாப்பின் கீழ் வைத்திருக்கப்படல் வேண்டும்.

கைது செய்யப்படும் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்படும் நபர் விரும்பும் மொழியில் வாக்கு மூலம் பெறப்பட்டு அதன் பின்னர் அதில் கைச்சாத்திடும்படி அவர் கேட்கப்பட வேண்டும். தமது சொந்தக் கையெழுத்தில் ஒருவர் வாக்கு மூலம் அளிக்க விரும்பினால் அதற்கு இடமளிக்கப்பட வேண்டும்.

கைதுசெய்யும் அல்லது தடுப்புக் காவலில் வைக்கும் எந்த ஒரு அதிகாரியும் கூடிய விரைவில் எவ்வாறாயினும் 4 நாட்களுக்குள் அதுபற்றி அறிவிக்க வேண்டும். மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி — விலகல் முறையில் — இன்று காலை 8-00 மணி முதல் மருதனார்மடத்தில் உள்ள மாஜனக் கல்லூரி மைதானத்தில், நடைபெறும் என யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. கே. டபிள்யூ விமலராஜன் அறிவித்துள்ளார்.

பன்னிரண்டு செயலகப் பிரிவு அணிகள் இன்றைய சுற்றுப் போட்டியில் பங்குபற்றவுள்ளன. (உ)

★ ★ ★

வலி-கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் இணைந்துள்ள கழகங்களுக்கு இடையில் லீக் முறையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் நாவாந்துறை சென் நிக்கிலஸ் கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ 3-00மணி: விண்மீன் எதிர் அண்ணா ஸ்ரார்
★ 4-00 மணி; வைக்கிங்ஸ் எதிர் கலைவாணி
★ 5-00 மணி: றோயல் எதிர் கவி

★ ★ ★

தோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் ஆண்களுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டி தொடர்ந்து இன்று மாலை கழக மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

ஸ்ரீ கணேச சனசமூக நிலையம் நடத்தும் 66 ஆவது ஆண்டு நிறைவு மென்பந்துச் சுற்றுப் போட்டியின் ஏழு ஆட்டங்கள் இன்று காலை 8-00 மணி முதல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாசம் அங்கத்துவ நிலையங்களுக்கு இடையில் நடத்தும்— 7 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான — ஆறு ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முன்கால் இறுதி ஆட்டங்கள் இன்று காலை 9.00 மணி முதல் யாழ். புனித மரியாள் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

சாவகச்சேரி மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் 47 ஆவது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி நடத்தப்பட்ட — தென்மராட்சி ரீதியிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று மாலை 4-00 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறும்.

இறுதி ஆட்டத்தில் புங்குடுதீவு அம்பாள் வி. க அணியை எதிர்த்து சாவகச்சேரி ஸ்ரீதாஸ் வி. க அணி மோதும்

(உ-117)

★ ★ ★

மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் 47 ஆவது ஆண்டு நிறைவை யொட்டி நடத்தப்படும் யாழ். மாவட்ட ரீதியிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் கழக மைதானத்தில் இன்று காலை 8. 30 மணிமுதல் நடைபெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:-

★ உடுவில் ஸ்புட்னிக் வி. க. எதிர் சிறுப்பிட்டி அண்ணா வி. க.
★ புத்தூர் விக்னேஸ்வரா ''ஏ'' அணி எதிர் சிறுப்பிட்டி அண்ணா ''ஏ'' அணி
★ நாவற்குழி இலக்கியன் வி.க. எதிர் மட்டுவில் மோகனதாஸ் வி. க
★ புத்தூர் விக்னேஸ்வரா வி. க. எதிர் மட்டுவில் வளர்மதி வி. க

(உ-117)

தொலைக்கல்வி அனுமதி அட்டை

பாழ்ப்பாணம், ஜூன் 17

சாவகச்சேரி பிராந்திய — தொலைக்கல்விப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஆசிரிய மாணவர்கள், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நிலையத்தில், தமது அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

புலிகளின் குரல் வானொலியில்

17 — 06 — 1995
சனி இரவு
★ 8-02 — புரட்சிக்குரல்
★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
★ 8-20 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — மலேரியா நோய் பற்றி — கலந்துரையாடுவோம்

18 — 06 — 1995
ஞாயிறு காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-45 — களத்தில்மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

தமிழீழ வானொலியில்

17 — 06 — 1995
சனி மாலை
★ 5-01 — சிந்தனைச்சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
★ 5-30 — அறிவியல் விநாடி வினா
★ 6-00 — சிந்தனைக்கு சில விநாடிகள்
★ 6-02 — பாமாலை
★ 6-15 — என் தெரிவு

'உதயன்' கிண்ணத்துக்காக

பருத்தித்துறை ஐ. வி. க.
நடத்தும்
7பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான

உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

இன்றும், நாளையும் நடைபெறவிருந்த கால் இறுதியாட்டங்கள் எதிர்வரும் திங்கள், செவ்வாய்க் கிழமைகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்பதை ரசிகர்களின் கவனத்துக்கு அறியத்தருகின்றோம்.

(சி/1513)

வண்ணை
வீரமாகாளி அம்மன் வி. க.
நடத்தும்
மாபெரும்
மென்பந்து கிரிக்கெட்

சுற்றுப் போட்டி

(7 பேர் கொண்ட அணிகளுக்கு இடையில்
12 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஆட்டம்)

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ விண்ணப்பப் படிவங்களைப் பெற்று ஒப்படைக்க வேண்டிய முகவரி;

ஜெகன் போட்டோ,
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

விண்ணப்ப முடிவு திகதி:
22-06-1995

★ குறிப்பு: கடந்த வருடத்தைப் போன்று வெற்றி பெறும் கழகங்களுக்கும், கழக வீரர்களுக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

அன்பளிப்பு:

ஜெகன் போட்டோ
யாழ்ப்பாணம்.

(37122)

இறுதி அறிவித்தல்

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

நல்லூர் முத்தவிநாயகர் சனசமூக நிலையத்தினரால், பாலர் பாடசாலை நிதிக்காக 15-5-1995 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டதன் பெறுபேறுகள் வருமாறு:-

முதலாம் பரிசு: ரூபா. 25, 000 00 இல: 11334
இரண்டாம் பரிசு: ரூபா. 15, 000 00 இல: 01270
மூன்றாம் பரிசு: ரூபா. 10, 000 00 இல: 17156

ஒவ்வொன்றும் ரூபா ஆயிரம் கொண்ட ஆறுதல் பரிசுகள் பத்து. அவற்றுக்கான சீட்டு இலக்கங்கள் வருமாறு:-

1) - 15236
2) - 17801
3) - 08703
4) - 08989
5) - 03459
6) - 10751
7) - 17711
8) - 01288
9) - 01948
10) - 01638

பரிசளிப்பு வைபவம் 25-6-1995 பி. ப 3. 30 மணியளவில் சனசமூகநிலைய மண்டபத்தில் நடைபெறும். 25-6-1995 அன்று தமக்குரிய பரிசிலைப் பெறத் தவறியோருக்கான உரிமைக் கோரிக்கைகளும், பணக் கொடுப்பனவுகளும் 21-8-1995 வரையுமே செல்லுபடியாகும்.

நிலைய நிர்வாகம்

(37121)

மரண அறிவித்தல்

திருமதி சுபாஸ்கரன் இந்துமதி

[ஆசிரியை- இணுவில் மத்திய கல்லூரி]

இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி சுபாஸ்கரன் இந்துமதி அவர்கள் 16-06-95 இல் காலமானார். இவர் சுபாஸ்கரன் [ஆசிரியர் - மானிப்பாய் இந்துக் கல்லூரி] அவர்களின் அன்பு மனைவியும், தாசுரன், ரஜீவன், ரசதை, சாலவன் ஆகியோரின் அன்புத் தாயாரும். இளையதம்பி-கணேஸ்வரி ஆகியோரின் அன்பு மகளும், அ. பரமேஸ்வரியின் அன்பு மருமகளும் ஸ்ரீமதி [பிரான்ஸ்], பொன்னம்பலம் [உரிமையாளர் போட்டோ கனொன்], கருணாகரன் [ஜேர்மனி] ஈசன் [ஹொலண்ட்], காலஞ்சென்ற மாயவன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், ஆனந்த மனோகரன் [பிரான்ஸ்] சிதாலட்சுமி [ஜேர்மனி], பிரஜீவா [ஹொலண்ட்] ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை பூவோடை மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்
அ. சுபாஸ்கரன் (கணவர்)

இணுவில் மேற்கு,
இணுவில்

(37117)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17-06-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது

புலிகளின் படையணியில் மகனைச் சேர்த்த தாய்

யாழ்ப்பாணம், ஜூன் 17

மண்மீட்புப் போரில் பங்குபற்றுவதற்காக விடுதலைப் புலிகளின் படையணியில் தனது மகனை இணைத்தார் தாய் ஒருவர்.

முள்ளி வீதி, அரியாலையைச் சேர்ந்த திருமதி. கந்தசாமி லீலாவதி என்ற தாயே தனது மகனான கந்தசாமி மோகனதாஸ் என்பவரை நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் படையணியில் சேர்த்துள்ளார். (ஐ)

அனர்த்தங்கள் பற்றிய இரு நாள் ஆய்வுப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூன் 17

அரச திணைக்களங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து நடத்தும் "அனர்த்தங்களின் போதான தயார்படுத்தலும் அவற்றுக்கான நடைமுறைகளும்'' என்ற தலைப்பிலான ஆய்வுப் பட்டறை இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் கொக்குவிலில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் ஆய்வுப் பட்டறைக்கு யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் தலைமை வகிப்பார்.

அரசியல்த்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன், பேராசிரியர் கா. சிவத்தம்பி, தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் திரு. சி. ரவி ஆகியோர் சிறப்புரையாற்றுவர்,

அதனைத் தொடர்ந்து ஐந்து தலைப்புக்களில் பல்துறை சார்ந்த ஆய்வாளர்கள் ஆய்வு அறிக்கை சமர்ப்பிப்பர்.

நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாம் நாள் பட்டறைக்கு யாழ். செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் திரு. க. மகாலிங்கம் தலைமை வகிப்பார்.

குழு நிலை கலந்துரையாடலும், பரிந்துரைகளும் அன்று நடைபெறும். (ஐ-3)

ஞானக் குழந்தை இல்லத்தின் வெள்ளி விழா

யாழ்ப்பாணம், ஜூன் 17

அரசடி ஞானக்குழந்தை இல்லத்தின் வெள்ளி விழாவும் மலர் வெளியீடும் நாளை ஞாயிறு பிற்பகல் 2 மணி முதல் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பாலர் கல்விக்கழகத் தலைவர் திரு. க. விஜயநாதன் தலைமையில் நடைபெறும்.

சமயபாட பரீட்சை

நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தான வழிபடுவோர் சங்கம் மணிவாசகர் குருபூசையை ஒட்டி நடத்தும் சைவசமய பாட அறிவுப் பரீட்சை இன்று சனி காலை 9 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது. [ஐ]

ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த தமிழீழ கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் தையல் கண்காட்சியும், சான்றிதழ் வழங்கலும் நாளை ஞாயிற்றுக்கிழமை முன்னர் அறிவித்த நிகழ்ச்சி நிரலின்படி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

விண்ணப்ப திகதி நீடிப்பு

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை ஏற்கப்படும் என்று கல்வி, உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

விண்ணப்ப முடிவுத் தினம் கடந்த 13 ஆம் திகதி என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (ஐ-3)

முற்றோதல் விழா

சாவகச்சேரி, ஜூன் 17

வட இலங்கைச் சர்வோதயத்தின் மட்டுவில் நுணாவில் பிரிவினரால் நடத்தப்படும் ''ஆத்திசூடி,'' ''கொன்றை வேந்தன்'' 'வாக்குண்டாம்' ஆகிய நன் நூல்களின் முற்றோதல் விழா இன்று சனி பிற்பகல் ஒரு மணிக்கு மட்டுவில் தெற்கு அ. மி. த. க. பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் திரு செ. க. துரைரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-31)

நாடக கண்காட்சியில் இன்று

குருநகர், ஜூன் 17

யாழ். திருமறைக் கலாமன்றம் நடத்தும் நாடக அரங்கியல் கண்காட்சியின் மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று காலை 9 மணி முதல் நடைபெறும்.

மாலை 5 மணிக்கு மாணவிகள் பங்குபற்றும் நாடக அரங்கியல் விநாடி வினா போட்டியும்-

தொடர்ந்து [illegible] இசை நாடகமும், 'அவள் ஒரு மாதிரி' என்ற [illegible]மும் நடைபெறும். (ஐ)

அச்சுவேலி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யின்போது அச்சுவேலியில் வலிகாமம் கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க வெதுப்பகம் தனியார் மின்ஒட்டுத்தொழிற்சாலை, கடைகள், பாடசாலைகள், ஆலயங்கள் உட்பட 50க்கும் மேற்பட்ட வீடுகள், கட்டடங்கள் சேதம் அடைந்தன. வல்லைப்பாலமும் ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகிச் சேதம் அடைந்தது. பல கால்நடைகள் உயிரிழந்தன.

இராணுவம் விரட்டி அடிக்கப்பட்டு மாலையில் வழமை நிலை திரும்பியதை அடுத்து, இடம் பெயர்ந்த மக்களில் பலர் தமது இருப்பிடங்களை நோக்கிச் சென்றுகொண்டிருந்ததை காணக் கூடியதாக இருந்தது.

இதற்கிடையில் நேற்று அச்சுவேலியில் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையில் ஒரு சிப்பாய் பலியானார் என்றும் ஒரு சிப்பாய் காயமடைந்தார் என்றும் கொழும்பில் இராணுவ தலைமையகம் தெரிவித்தது.

அச்சுவேலி நோக்கி நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையை முடித்துக் கொண்டு படையினர் பழைய நிலைகளுக்கு மாலை 5.30க்கு திரும்பியதாகவும் இராணுவ தலைமையகம் தெரிவித்தது.

[இ-3-155-11-15]

உரிமைகளை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தில் முடிவுற்றது.

அங்கு புலம்பெயர்ந்து வாழும் சுமார் 3 ஆயிரம் தமிழர்கள் இந்த ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

அக்கூட்டத்தில் திரு. லோறன்ஸ் திலகர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசு சமாதானம் பற்றிய நாட்டமின்றியே சமாதானம் பற்றி பேசுகிறது; அது யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களை சாகடிக்கவே முனைப்புடன் செயற்படுகிறது.

எங்களோடு பேச்சுக்களை நடத்திக்கொண்டே அரசு, தென் ஆபிரிக்காவில் ஆயுத பேரம் நடத்தியது எமக்குத் தெரியும்.

தனி அரசுக்கான கட்டுமானத்துடன், தரை - கடல் - ஆகாயம் என முப்படைகளையும் கட்டி வளர்த்த செயற்பாடு, உலகில் எந்தவொரு விடுதலைப் போராட்ட வரலாற்றிலும் நிகழ்ந்ததில்லை.

எமது போராட்டம் இனி எந்த சக்தியினாலும் தோற்கடிக்கப்படமுடியாத வெற்றிப் படியை அடைந்துவிட்டது.

எங்கள் சமாதானக் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கின்றன; ஆனால் உரிமைகளை சிறிதளவும் விட்டுக்கொடுக்காத ஒரு தீர்வுக்குத்தான் நாம் தயாராக இருக்கிறோம்.

நாங்கள் இன்று ஓர் "அரசை நோக்கிய அரசு'' என்ற நிலையில் இருந்துகொண்டே பேச்சுவார்த்தைக்கு தயாராக இருக்கிறோம்.

நாங்கள் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவித்து வரும் இன ஒடுக்குமுறைகள் தற்போது உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன.

முன்னைய அரசு இராணுவ வாதத்தை வெளிப்படையாகவே முன்வைத்தது; இந்த அரசு அதனை பூசி மெழுகி சூட்சுமமாக முன்வைக்கிறது.

அரசின் இந்த நடவடிக்கைக்கு நாம் இடம்கொடுக்க மாட்டோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

[illegible] கூட்டத்தில் வண. பிதா [illegible] உரையாற்றினர். (இ-5)

ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 17

அரியாலை சனசமூக நிலையத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை ஞாயிறு பிற்பகல் 2 மணி முதல் நடைபெறவுள்ளது.

ஆண்டு விழாவில் இல்ல மெய்வல்லுநர் போட்டியும், தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஐ)

முல்லைத்தீவில் 2 மீனவரை காணோம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

முல்லைத்தீவு கடற் பகுதியில் கடற்படையினர் நடத்திய தாக்குதலின் போது இரு மீனவர்கள் காணாமற் போயுள்ளனர்.

மூவர் படுகாயமடைந்தனர்.

முல்லைத்தீவு முள்ளி வாய்க்கால் பகுதியில் இந்த சம்பவம் கடந்த புதன்கிழமை நடந்தது.

செல்வின், காண்டீபன் என்ற இரு இளைஞர்கள் கடும் காயம் அடைந்தனர்.

(இ-3)

குண்டு பற்றி எச்சரிக்கும் சுவரொட்டிகள்

கொழும்பு, ஜூன் 17

வெடிகுண்டுகள் குறித்து விழிப்பாக இருக்குமாறு பொதுமக்களை அறிவுறுத்தும் சுவரொட்டிகள் தென் பகுதியின் முக்கிய நகரங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

சந்தேகத்துக்கு இடமான பார்சல்கள், நபர்கள் குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்று அந்த சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ஐ-14)

நயினை அம்மன் உற்சவம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயவருடாந்த உற்சவம் இம்மாதம் 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை மாதம் 13 ஆம் திகதியுடன் முடிவடையுமென்று தெரிவிக்கப்படுகிறது

வழமை போல் இம்முறையும் உற்சவ காலத்தை சிறப்பாகக் கொண்டாட நயினை அம்மன் அறங்காவல் சபையினர் ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். [க-100]

கருத்தரங்கு

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட பச்சிலைப் பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான கருத்தரங்கு கடந்த மே 29 ஆம் திகதி சங்கத் தலைவர் செ. மார்க்கண்டு தலைமையில் நடைபெற்றது. (க-117)

வீரகெட்டியவில் தமிழர் கைது

அம்பாந்தோட்டை வீரகெட்டியவில் 38 வயதான ஒரு தமிழர் கடந்த 10 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

தான் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் 6 மாதங்களுக்கு முன் புகையிலை விற்பதற்காக வீரகெட்டிய வந்ததாகவும் அவர் கூறியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க)

இராணுவ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளனர்.

நிலக்கண்ணிகள் உள்ள பகுதிகளில் சோதனை நடத்துவதற்கு படை அதிகாரிகள் தங்களை கேடயங்களாக பயன்படுத்தினர் என்று அவர்கள் தெரிவித்தனர்.

ரயில் மீது தாக்குதல் நடத்தப்படுவதைத் தடுப்பதற்காக ரயில் பாதை நெடுகிலும் பொதுமக்கள் நிறுத்தப்படுகின்றனர்.

போர் மீண்டும் ஆரம்பித்த பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்படுபவர்கள் விடுவிக்கப்படும் முன்னர் குண்டாந்தடிகளால் தாக்குதலுக்கும், வேறுபல சித்திரவதைகளுக்கும் உள்ளாகின்றனர்.

இத்தகைய சித்திரவதைகளை நிறுத்தும் நோக்கிலேயே மனித உரிமைகளைப் பாதுகாக்கும் செயலணியுடன் இணைந்து செயற்படுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பாதுகாப்புப் படைத் தளபதிகளுக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

ஆனால் அவ்வாறான மனித உரிமைகள் செயலணி இதுவரை அமைக்கப்படவில்லை.

இவ்வாறு பி.பி.ஸி. செய்தியாளர் மேலும் தெரிவித்தார். [ஐ-6]

கிழக்கு முகாம்களுக்கு கேணல் ரத்வத்த விஜயம்

மட்டக்களப்பு, ஜூன் 17

பாதுகாப்புத் துணை அமைச்சர் கேணல் அநுருத்த ரத்வத்த கடந்த வார இறுதியில் கிழக்கில் உள்ள படை முகாம்களுக்கு விஜயம் செய்தார்.

மேஜர் ஜெனரல் றோஹான் தலுவத்த, மேஜர் ஜெனரல் எஸ் ஹப்பு ஆராய்ச்சி, பிரிகேடியர் கீர்த்தி ஹாலங்கமுவ, முன்னாள் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் பசில் குணசேகர ஆகியோர் கேணல் ரத்வத்தவுடன் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

ஆசிரியர்களுக்கு ஜூன் முதல் புதிய திட்ட சம்பளம்

அச்சுவேலி, ஜூன் 17

யாழ். மாவட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு ''புதிய சம்பளத் திட்டப்படி'' அடிப்படைச் சம்பளம் ஜூன் மாதச் சம்பளத்துடன் வழங்கப்படும்.

புதிய சம்பளத்திட்டத்தின்படி சம்பளம் வழங்குவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் சகல கல்விக் கோட்ட அலுவலகங்களிலும் நடைபெற்று வருகின்றன.

ஆசிரியர் சேவையின் நான்கு பிரிவுக்கும் ஏற்ப — சேவை, கல்வித் தகைமை, தொழில் சார் தகைமை ஆகியவற்றின் அடிப்படையில் ஆசிரியர்கள் உள்வாங்கப்பட்டு புதிய சம்பளம் வழங்கப்படுகின்றது.

ஜூன் மாதச் சம்பளத்துடன் புதிய சம்பளம் வழங்கப்படுவதுடன் ''தை - மே'' வரை உள்ள சம்பளப் பாக்கி தவணை அடிப்படையில் வழங்கப்படும். [க-11]

வடக்கு கிழக்கு ஆளுநரின் அலுவலகம் கொழும்பில்

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகாவின் அலுவலகம் கொழும்பு கிறகரி வீதி 83 ஆம் இலக்க கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மோதல்கள் ஆரம்பித்த பின்னர் திருமலையில் உள்ள தமது அலுவலகத்தில் இருந்து ஆளுநர் காமினி பொன்சேகா வெளியேறிவிட்டார் என்றும்—

கொழும்பில் அவர் எங்கே இருக்கிறார் என்பது மர்மமாக இருப்பதாகவும் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. (ஐ)

ஆலயத்தில் திருடப்பட்ட ஆபரணங்கள் மீட்பு

யாழ்ப்பாணம்' ஜூன் 17

1993 ஆம் ஆண்டு பிற்பகுதியில் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் இருந்து திருடப்பட்ட தங்க, வெள்ளி ஆபரணங்கள் தமிழீழ காவல் துறையினரின் குற்றப் புலனாய்வு பகுதியினரால் மீட்கப்பட்டுள்ளன.

குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட போதே திருட்டு அம்பலமானது.

இவர்களால் திருடி விற்கப்பட்ட தங்க, வெள்ளி ஆபரணங்கள் உருக்கிய நிலையில் மீட்கப்பட்டன.

சம்பந்தப்பட்ட நபர்கள் இருவரும் யாழ்ப்பாண காவல் பணிமனையினரால் மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

குற்றவாளிகள் இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து இருவரையும் தலா 2 ஆயிரம் ரூபா குற்றப் பணம் செலுத்துமாறு நீதிமன்று தீர்ப்பளித்தது.

உருக்கிய நிலையில் மீட்கப்பட்ட தங்க, வெள்ளி ஆபரணங்களை ஆலய உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறும் நீதிமன்று உத்தரவிட்டது. (ஐ)

சம்பள நிர்ணய ஆணைக்குழுவுக்கு

ஒய்வூதிய கொடுப்பனவு முரண்பாடு குறித்து மகஜர்

ஒய்வூதியக் கொடுப்பனவுகளின் முரண்பாடுகளை நீக்க வேண்டும் எனக்கோரி வட மாநில ஒய்வூதியர்சங்கங்களின்சம்மேளனம், சம்பள நிர்ணய ஆணைக்குழுவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இளைப்பாறிய திகதிகளைக் கருத்தில் கொள்ளாது, ஒரு தரத்தில் இருந்து ஓய்வு பெறுபவர்களுக்கு, வழங்கப்படும் ஒய்வூதியம் அதே தரத்தில் இருந்து ஏற்கனவே ஓய்வு பெற்றவர்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்பதே இந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய கோரிக்கை ஆகும்.

பொழுது இலிகிதர் சேவை நிர்வாக சேவை ஆகிய தரங்களில் இருந்து 01-08-94 திகதிக்கு பின்னர் ஓய்வு பெற்றவர்களின் ஒய்வூதியக் கொடுப்பனவுகள் மற்றும் அக்காலப் பகுதிக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் இடையேயான வித்தியாசங்கள் குறித்தும் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒய்வூதியர்களுக்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் வரையறை எதுவுமின்றி வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படவேண்டும் என்றும் மகஜரில் குறிப்பிட்டுள்ளது. (ஒ-14)

உள்ளூர் தயாரிப்பு பியர் சந்தைக்கு வருகிறது!

யாழ்ப்பாணம், ஜூன் 17

அரிசியிலிருந்து தயாரிக்கப்பட்ட ''ஈஸ்ட்'' பாண் தயாரிப்புக்காக வழங்கப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணத்தில் ''உயிர் நுட்பு'' என்ற நிறுவனம் இதனை தயாரித்துள்ளது.

இதே வேளை மேற்படி நிறுவனம் அரிசியிலிருந்து உற்பத்தி செய்த சோடா. வைன், பியர் போன்றவற்றையும் இம் மாத இறுதியில் சந்தைக்கு விட ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

அரிசியை மூலப் பொருளாகக் கொண்டு தயாரிக்கப்படும் நொதியம் மூலம் இந்தப் பொருள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அரிசியிலிருந்து தயாரிக்கப்பட்ட குளுக்கோஸ் 'ரொபி'' தயாரிப்புக்கு பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. [ஒ-3-4]

நிறைகுறைந்த படிகளை பாவித்து மீன் வியாபாரம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

பல ஆண்டுகளாக முத்திரையிடப்படாத, நிறை குறைவான நிறுத்தல் அளவைகளைப் பாவித்து மீன் வியாபாரம் செய்து வந்தமை கடந்த 14 ஆம் திகதி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட நிறுத்தல் அளவைகள் பரிசோதகர் திரு. கா. நாகலிங்கம் தலைமையில் சென்ற பரிசோதகர் குழு யாழ் நாவலர் வீதி, அத்தியடி வீதிச் சந்தியில் கூடும் மீன் பெட்டி வியாபாரிகளை திடீர்ப் பரிசோதனை செய்தபோதே இவ்விடயம் தெரியவந்துள்ளது.

பல வருடங்களாக முத்திரையிடப்படாத தராசு படிகள் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டு மேல் நடவடிக்கைக்காக யாழ். செயலகத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட படிகளில் ஒரு கிலோக் கிறாமிற்கு 250 கிறாம் நிறை குறைந்து காணப்பட்டதாக யாழ். மாவட்ட நிறுவை அளவைகள் பரிசோதகர் தெரிவித்தார்.